## மே - 24 - புதன்
### கிறிஸ்தவர்களது சகாய அன்னை

**இளைஞரே, கன்னியரே, முதியோரே மற்றும் சிறியோரே, நீங்கள் எல்லாரும் ஆண்டவரைப் போற்றுங்கள். திபா. 148:12**

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 17 : 15 ---18:1

அக்காலத்தில் பவுலுடன் சென்றவர்கள் அவரை ஏதென்சு வரை அழைத்துச் சென்றார்கள். சீலாவும் திமொத்தேயுவும் விரைவில் வந்துசேரவேண்டும் என்னும் கட்டளையைப் பவுலிடமிருந்து பெற்றுக்கொண்டு அவர்கள் திரும்பிச் சென்றார்கள். பவுல் அவர்களுக்காக ஏதென்சில் காத்திருந்தபோது, அந்நகரில் சிலைகள் நிறைந்திருப்பதைக் கண்டு மனம் கலங்கினார். எனவே அவர் தொழுகைக்கூடத்தில் யூதர்களோடும் கடவுளை வழிபடு வோரோடும், சந்தை வெளிகளில் சந்தித்த மக்களோடும் ஒவ்வொரு நாளும் விவாதித்து வந்தார். எப்பிக்கூரர், ஸ்தோயிக்கர் ஆகிய மெய்யியல் அறிஞர்கள் சிலர் அவருடன் கலந்து உரையாடினர். வேறு சிலர், ”இவன் என்னதான் பிதற்றுகிறான்?” என்றனர். அவர் இயேசுவையும் அவரது உயிர்த்தெழுதலையும் நற்செய்தியாக அறிவித்து வந்ததால் மற்றும் சிலர், ”இவன் வேற்றுத் தெய்வங்களைப் பற்றி அறிவிப்பவன் போலத்தெரிகிறது ”என்றனர். பின்பு அவர்கள் அவரை அரயோப்பாகு என்னும் மன்றத்துக்கு அழைத்துக்கொண்டு போய், ”நீர் அளிக்கும் இந்தப் புதிய போதனையைப் பற்றி நாங்கள் அறியலாமா? நீர் எங்களுக்குச் சொல்வது கேட்கப் புதுமையாய் உள்ளதே! அவற்றின் பொருள் என்னவென்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம்” என்றார்கள். ஏனென்சு நகரத்தார் அனைவரும், அங்குக் குடியேறி வாழ்ந்துவந்த அன்னியரும் இதுபோன்ற புதிய செய்திகளைக் கேட்பதிலும் சொல்லுவதிலும் மட்டுமே தங்கள் நேரத்தைப் போக்கினர். அரயோப்பாகு மன்றத்தின் நடுவில் பவுல் எழுந்து நின்று கூறியது: ”ஏதென்சு நகர மக்களே, நீங்கள் மிகுந்த சமயப் பற்றுள்ளவர்கள் என்பதை நான் காண்கிறேன். நான் உங்களுடைய தொழுகை யிடங்களை உற்றுப்பார்த்துக்கொண்டு வந்தபோது ”அறியாத தெய்வத்துக்கு” என்று எழுதப்பட்டிருந்த பலிபீடம் ஒன்றைக் கண்டேன். நீங்கள் அறியாமல் வழிபட்டுக் கொண்டிருக்கும் அந்த தெய்வத்தையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன். ”உலகையும், அதிலுள்ள அனைத்தையம் படைத்த கடவுள் விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவர். மனிதர் கையால் கட்டிய திருக்கோவில் களில் அவர் குடியிருப்பதில்லை. அனைவருக்கும் உயிரையும் மூச்சையும் மற்றனைத்தையும் கொடுப்பவர் அவரே. எனவே மனிதர் கையால் செய்யும் ஊழியம் எதுவும் அவருக்குத் தேவையில்லை. ஒரே ஆளிலிருந்து அவர் மக்களினம் அனைத்தையும் படைத்து அவர்களை மண்ணுலகின் மீது குடியிருக்கச் செய்தார் அவர்களுக்குக் குறிப்பிட்ட காலங்களையும் குடியிருக்கும் எல்லைகளையும் வரையறுத்துக் கொடுத்தார். கடவுள் தம்மை அவர்கள் தேடவேண்டும் என்பதற்காக இப்படிச் செய்தார் தட்டித் தடவியாவது தம்மைக் கண்டுகொள்ள வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு செய்தார். ஏனெனில் அவர் நம் ஒவ்வொருவருக்கும் அருகிலேயே உள்ளார். அவரைச் சார்ந்துதான் நாம் வாழ்கின்றோம், இயங்குகின்றோம், இருக்கின்றோம். உங்கள் கவிஞர் சிலர் கூறுவதுபோல, ”நாம் அவருடைய பிள்ளைகளே.” நாம் கடவுளுடைய பிள்ளைகளாய் இருப்பதால், மனித கற்பனையாலும் சிற்ப வேலைத் திறமையாலும் உருவாக்கப்பட்ட பொன், வெள்ளி, கல் உருவங்களைப் போலக் கடவுள் இருப்பார் என நாம் எண்ணுவது முறையாகாது. ஏனெனில் மக்கள் அறியா மையில் வாழ்ந்த காலத்தில் கடவுள் இதனைப் பொருட்படுத்த வில்லை. ஆனால் இப்போது எங்குமுள்ள மக்கள் யாவரும் மனம் மாற வேண்டும் என்று அவர் கட்டளையிடுகிறார். ஏனென்றால் ஒருநாள் வரும். அப்போது தாம் நியமித்த ஒருவரைக் கொண்டு அவர் உலகத்துக்கு நேர்மையான தீர்ப்பு அளிப்பார். இறந்த அவரை உயிர்த்தெழச் செய்ததன் வாயிலாக இந் நம்பிக்கை உறுதியானதென எல்லாருக்கும் தெளிவுபடுத்தினார்.” ”இறந்தவர் உயிர்த்தெழுதல்” என்பது பற்றிக் கேட்டதும் சிலர் அவரைக் கிண்டல் செய்தனர். மற்றவர்கள், ”இதைப்பற்றி நீர் மீண்டும் வந்து பேசும் கேட்போம்” என்றார்கள். அதன்பின் பவுல் அவர்கள் நடுவிலிருந்து வெளியே சென்றார். சிலர் நம்பிக்கை கொண்டு அவர்களுடன் சேர்ந்துகொண்டனர். அவர்களுள் அரயோபாகு மன்றத்தின் உறுப்பினரான தியோனிசியுவும் தாமரி என்னும் பெண் ஒருவரும் வேறு சிலரும் அடங்குவர். இவற்றுக்குப் பின்பு பவுல் ஏதென்சை விட்டுக் கொரிந்துக்குப் போய்ச் சேர்ந்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே விண்ணும் மண்ணும் உமது மாட்சிமையால் நிறைந்துள்ளன

### நற்செய்தி : யோவான் 16 : 12 – 15

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:, ”நான் உங்களிடம் சொல்ல வேண்டியவை இன்னும் பல உள்ளன. ஆனால் அவற்றை இப்போது உங்களால் தாங்க இயலாது. உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார். அவர் தாமாக எதையும் பேசமாட்டார் தாம் கேட்பதையே பேசுவார் வரப்போகிறவற்றை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னிடமிருந்து கேட்டு உங்களுக்கு அறிவிப்பார். இவ்வாறு அவர் என்னை மாட்சிப்படுத்துவார். தந்தையுடையவை யாவும் என்னுடையவையே. எனவேதான் ”அவர் என்னிடமிருந்து பெற்று உங்களுக்கு அறிவிப்பார்” என்றேன்.

**தியானம்:** யோவான் நற்செய்தியில் இயேசு தம்மை “உண்மை” என வெளிப்படுத்துகின்றார். இயேசுவைப்பற்றிய உண்மையை நமக்கு தூய ஆவி வெளிப்படுத்துவதோடு அதே உண்மையை நம் வாழ்வில் இணைத்து வாழ்வதற்கு தூய ஆவியானா் வழி காட்டவும் செய்வார். தூய ஆவியாரும் இயேசுவைப் போல நம்மிடையே செயலாற்றுகின்றாா். தூய ஆவியின் செயல் நாம் இயேசுவைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு உதவியாளராக இருக்கின்றாா். பல உண்மைகள் உலகில் இருக்கின்றன ஆனால் நிறை உண்மை என்பது இயேசுவிடம் மட்டுமே உள்ளது. இயேசு நானே “உண்மை” என்கின்றாா். தூய ஆவியாா் நம்மை இயேவிடம் நோக்கி நம்மை இட்டுச் செல்வது மட்டுமல்லாது வரப்போகின்றவற்றை அறிவிப்பாா். அது தான் “இறைவாக்கு” என்னும் கொடை. இறைவாக்கினா்கள் அனைவரும் தூய ஆவியால் இயக்கப்படுகின்றவா்கள். நாமும் இறைவாக்கினா்களாக செயல்பட நாமும் தூய ஆவியால் நிரப்பப்பட வேண்டும். தூயஆவியால் இயக்கப்படும் அனைவரும் இயேசுவை மாட்சிபடுத்த வேண்டும். நம் வாழ்விலும் தூய ஆவியின் செயல்பாட்டைக் கண்டு கொள்வதும் அவா் காட்டுகின்ற வழியில் நடப்பதும் நம் பொறுப்பு என்பதை உணா்ந்து வாழ்வோம் ஆமென்.